நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# தரம் : தொடக்கநிலை

***November 2008***

வினாக்கள் : 40

வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்

ஆசிரியர் வாசிப்பதற்கான நேரம் : 15 நிமிடங்கள்

**ஆசிரியரின் கவனத்திற்கு :**

- முழு வினாத்தாளும் முதல் 15 நிமிடங்களில் **மட்டுமே** வாசிக்கப்பட வேண்டும்.
- வாசித்த பின்னர் வேறு உதவிகள் வழங்கப்படக் கூடாது.
- வாசிக்கப்படும் நேரத்தில் மாணவர்கள் வினாத்தாளிலோ அல்லது விடைத்தாளிலோ எந்த விதமான அடையாளங்களையும் இடக்கூடாது.

**உங்கள் பதில்களை தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.**

For questions 1 to 3, choose the word(s) that best describe the action shown in the picture.
1 முதல் 3 வரையுள்ள வினாக்களுக்கு அருகில் உள்ள படத்தில் நடக்கும் செய்கையைச் சரியாகக் குறிக்கும் சொல்லை (சொற்களை) தெரிவு செய்க.



1. இந்த சிறுவன்

(a) படம் வரைகிறான்
(b) ஓடுகிறான்
(c) புத்தகம் படிக்கிறான்
(d) சாப்பிடுகிறான்



2. குரங்கு

(a) தாவிக்கொண்டு இருக்கிறது
(b) தூங்கிக் கொண்டு இருக்கிறது
(c) சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறது
(d) ஏறிக் கொண்டு இருக்கிறது



3. இப்படத்தில் காணும் காட்சி

(a) புகையிரத நிலையத்தில் பேருந்து நுழைகிறது
(b) பேருந்து நிலையத்தில் புகையிரதம் நுழைகிறது
(c) புகையிரத நிலையத்தில் புகையிரதம் நுழைகிறது
(d) பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைகிறது

அடுத்த பக்கத்தில் தொடரும்.

Read and understand the Poem “குருவி” and answer the questions 4 to 7.
“குருவி” என்ற பாடலை வாசித்து அவற்றில் இருந்து பெறப்படும் தகவல்களைக் கொண்டு 4 முதல் 7 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

## குருவி

குருவி பறந்து வந்ததாம்
குழந்தை அருகில் நின்றதாம்

பாவம் அதற்குப் பசிக்குதாம்
பாப்பா நெல்லைக் கொடுத்ததாம்

குருவி அந்த நெல்லையே
கொத்திக் கொத்தித் தின்றதாம்

பசியும் நீக்கிப் பறந்ததே
பாப்பா இன்பம் கொண்டதே

| | |
|---|---|
| 4. பாடலில் எந்த பறவை பற்றி சொல்லி இருக்கிறது?<br>(a) காகம்<br>(b) குருவி<br>(c) மயில்<br>(d) வாத்து | 5. பறவை எங்கே வந்து நின்றது?<br>(a) குழைந்தைக்கு பின்னால்<br>(b) குழைந்தைக்கு முன்னால்<br>(c) குழைந்தைக்கு அருகில்<br>(d) மரத்தில் |
| 6. பாப்பா பறவைக்கு என்ன கொடுத்தது?<br>(a) பழம்<br>(b) கல்<br>(c) தண்ணீர்<br>(d) நெல் | 7. பறவை பறந்தபின் பாப்பா எப்படி உணர்ந்தது?<br>(a) அழுகையாக<br>(b) துக்கமாக<br>(c) இன்பமாக<br>(d) விளையாட்டாக |

அடுத்த பக்கத்தில் தொடரும்.

For questions 8 and 9 choose the word that is spelt incorrectly in the given sentence.
8 ஆம், 9ஆம் வினாக்களுக்குத் தரப்பட்ட வசனத்திலே பிழையாக எழுதப்பட்டுள்ள சொல்லினைக் காட்டுக.

8. நானும் என் தம்பியும் நீச்சல்குலம் சென்றோம்.

(a) தம்பியும்
(b) நீச்சல்குலம்
(c) சென்றோம்
(d) நானும்

9. என் வீட்டில் பல நிறங்களில் புக்கள் உள்ளன.

(a) வீட்டில்
(b) புக்கள்
(c) உள்ளன
(d) நிறங்களில்

For questions 10 and 11 choose the correct spelling of the underlined word that is spelt incorrectly in the given sentence.
10ஆம், 11ஆம் கேள்விகளில் பிழையான ஒரு சொல் கோடிட்டு காட்டப்பட்டுள்ளது. அதற்குரிய சரியான சொல் எது?

10. என் குடும்பம் <u>பிரிய</u> குடும்பம்.

(a) பெரிய
(b) பேரிய
(c) பொரிய
(d) பேறிய

11. நான் **<u>தழையில்</u>** தொப்பி மாட்டினேன்.

(a) தளையில்
(b) தலையில்
(c) துலையிள்
(d) துழையில்

Look at the pictures carefully and answer questions 12 to 15.

படங்களைக் கவனமாகப் பார்த்து 12 முதல் 15 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.



12. இந்தப் படத்தில் காணப்படும் காட்சி எவ்வாறு தோன்றுகிறது?

(a) மனிதர் வாகனத்தின் உள்ளே இருப்பது போல
(b) மனிதர் வாகனத்தின் மேலே நிற்பது போல
(c) மனிதர் வாகனத்தின் கீழே இருப்பது போல
(d) மனிதர் வாகனத்தின் அருகில் நிற்பது போல



13. இப்படத்தில் காணப்படுவது:

(a) ஒரு பூக்கடை.
(b) ஒரு பழக்கடை.
(c) ஒரு துணிக்கடை.
(d) ஒரு புத்தகக்கடை.




14. இந்தப் படத்தில் காணப்படும் வாகனம்

(a) வீட்டிற்குப் பின்னால் நிற்கிறது.
(b) வீட்டிற்குப் பக்கத்தில் நிற்கிறது.
(c) வீட்டிற்கு முன்னால் நிற்கிறது.
(d) வீட்டிற்கு உள்ளே நிற்கிறது.



15. இப்படத்தில் மனிதர்கள்:

(a) வீட்டிற்கு உள்ளே நிற்கிறார்கள்.
(b) வீட்டிற்கு மிக அருகில் நிற்கிறார்கள்.
(c) வீட்டிற்குப் பக்கத்தில் நிற்கிறார்கள்.
(d) வீட்டிற்குப் தொலைவில் நிற்கிறார்கள்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

For questions 16 to 21 choose the best answer.

16 முதல் 21 வரையுள்ள வினாக்களுக்கு ஒவ்வொரு இடைவெளிக்கும் மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.

16. எனக்குப் பரிசு ______________________________ .
   (a) கிடைத்தன
   (b) கிடைத்தது
   (c) பெற்றது
   (d) பெற்றன

17. இன்று மழை ______________________________ .
   (a) காயும்
   (b) பெய்யும்
   (c) மறையும்
   (d) உதிக்கும்

18. நான் வண்டியை ______________________________ .
   (a) ஓடினேன்
   (b) ஏறினேன்
   (c) இறங்கினேன்
   (d) ஓட்டினேன்.

19. நான் படம் ______________________________ .
   (a) வரைந்தேன்
   (a) எழுதினேன்
   (b) படித்தேன்
   (c) தூங்கினேன்

20. நீங்கள் எப்படி ______________________________?
   (a) இருக்கிறாய்
   (b) இருக்கிறீர்கள்
   (c) இருக்கிறாள்
   (d) இருக்கிறார்கள்

21. மாம்பழம் இனிக்கும், பாகற்காய் ______________________________ .
   (a) புளிக்கும்
   (b) உறைக்கும்
   (c) இனிக்கும்
   (d) கசக்கும்

For questions 22 to 24 choose the word(s) that has (have) the closest meaning to the underlined word(s).
22 முதல் 24 வரை கோடிட்ட சொல்லுக்கு (சொற்களுக்கு) மிகப் பொருத்தமான சொல் (சொற்களை) தருக.

| | |
|---|---|
| 22. நான் இரவு 8 மணிக்கு **<u>உறங்க</u>** செல்வேன்.<br>(a) சாப்பிட<br>(b) தூங்க<br>(c) விளையாட<br>(d) படிக்க | 23. எனக்கு தோசை **<u>உண்ணப்</u>** பிடிக்கும்<br>(a) சாப்பிட<br>(b) குடிக்க<br>(c) பார்க்க<br>(d) கொடுக்க |
| 24. நாம் **<u>நீராடுவோம்</u>**<br>(a) விளையாடுவோம்<br>(b) சாப்பிடுவோம்<br>(c) தூங்குவோம்<br>(d) குளிப்போம் | |

For questions 25 to 27 give the opposites to the underlined words.
25 முதல் 27 வரை கோடிட்ட சொல்லுக்கு எதிர்ச்சொல் தருக.

25. மேசையின் **<u>மேலே</u>** புத்தகம் இருக்கிறது.

(a) நடுவில்
(b) கீழே
(c) பின்னால்
(d) முன்னால்

26. முயல் **<u>வேகமாக</u>** ஓடும்.

(a) மெதுவாக
(b) அதிகமாக
(c) விரைவாக
(d) பறந்து

27. பழத்தோலை **<u>வெளியே</u>** எறிந்தான்.

(a) வீட்டில்
(b) பூங்காவில்
(c) உள்ளே
(d) சாலையில்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

Read and understand the text “பிறந்த நாள் அழைப்பிதழ்“ and answer the questions 28 to 31.

“பிறந்த நாள் அழைப்பிதழ்” பற்றிய குறிப்புகளை வாசித்து அவற்றில் இருந்து பெறப்படும் தகவல்களைக் கொண்டு 28 முதல் 31 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

# பிறந்தநாள் விழா அழைப்பிதழ்

**வாணியின் பிறந்தநாள் விழா நடைபெறும் இடம்: 33, ராணி சாலை, ஹோம்புஷ்**

**நடைபெறும் நாள்: 21-12-2008**

**நேரம்: 6 மணி முதல் 8 மணி வரை**

**(முடிந்தால் ஊதா நிற உடையில் வரவும்)**

28. விழா நடைபெறும் இடம் எந்த சாலையில் உள்ளது.

   (a) ராணி
   (b) நிலா
   (c) ஊதா
   (d) கல்லூரி

29. விழா எந்த மாதம் நடைபெறுகிறது?

   (a) மாசி
   (b) சித்திரை
   (c) புரட்டாதி
   (d) மார்கழி

30. இது யாருடைய பிறந்தநாள் அழைப்பிதழ்?

   (a) கண்ணன்
   (b) சுதா
   (c) வாணி
   (d) மாலா

31. அழைப்பிதழில் எந்த நிற உடை பற்றி சொல்லி இருக்கிறது?

   (a) சிவப்பு
   (b) ஊதா
   (c) மஞ்சள்
   (d) வெள்ளை

அடுத்த பக்கத்தில் தொடரும்.

For questions 32 to 34 rearrange the sentences in order.
32 முதல் 34 வரையுள்ள கேள்விகளுக்கு தரப்பட்ட வசனங்களை சரியான ஒழுங்கில் அமைத்துக் காட்டுக.

32. (1) வீட்டை பூட்டினேன்.
(2) பேருந்து வந்தது.
(3) பேருந்து நிலையம் அடைந்தேன்.
(4) பேருந்தில் ஏறி அமர்ந்தேன்.

(a) (2), (3), (1), (4) (b) (2), (4), (3), (1)
(c) (3), (2), (1), (4) (d) (1), (3), (2), (4)

33. (1) அம்மா மகிழ்ச்சி அடைந்தாள்.
(2) அழகாக படம் வரைந்தேன்.
(3) அம்மாவிடம் காட்டினேன்.
(4) நான் எழுதுகோலை எடுத்தேன்.

(a) (1), (2), (3),( 4) (b) (4), (1), (2), (3)
(c) (4), (2), (3), (1) (d) (4), (3), (2), (1)

34. (1) தொலைக்காட்சியில் படம் பார்த்தோம்.
(2) வீட்டிற்கு நண்பர்கள் வந்தார்கள்.
(3) உணவு உண்டோம்.
(4) படம் முடிந்தபின் அனைவரும் எழுந்து சென்றார்கள்.

(a) (2), (3), (1), (4) (b) (1), (2), (3), (4)
(c) (1), (3), (2), (1) (d) (2), (4), (1), (3)

For questions 35 to 37 on "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" choose the right answer.
35 முதல் 37 வரையுள்ள "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற கொன்றை வேந்தன் பற்றிய வினாக்களுக்கு மிகவும் சரியான பதிலைத் தெரிவு செய்க.

| |
|---|
| ஆலயம் தொழுவது சாலவும் நன்று. |

35. “**ஆலயம்**” என்ற சொல்லைக் குறிக்கும் இன்னோர் சொல்.

(a) பள்ளிக்கூடம்
(b) வீடு
(c) கோயில்
(d) பூங்கா

36. பின்வரும் சொற்களில் எது “**தொழுவது**” என்ற சொல்லைக் குறிப்பிட **மாட்டாது**?

(a) கும்பிடுவது
(b) வணங்குவது
(c) துதிப்பது
(d) பாடுவது

37. இதன் கருத்து

(a) ஆலயத்தில் சாப்பிடுவது நல்லது.
(b) ஆலயத்திற்கு சென்று கடவுளை வணங்குவது மிகவும் நல்லது.
(c) ஆலயத்தில் ஓடி விளையாடுவது நல்லது.
(d) ஆலயத்தை துப்பரவாக்குவது நல்லது.

Read the text and answer the questions 38 to 40.
கதையைப் படித்து 38 முதல் 40 வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும்.

<u>**ஆமையும் முயலும்**</u>

**ஒரு ஊரில் ஆமையும் முயலும் இருந்தன. முயல் ஆமையை ஓட்டப் பந்தயத்திற்கு அழைத்தது. பாதி தூரம் ஓடியபின் முயல் திரும்பிப் பார்த்தது. ஆமை மெதுவாக வந்து கொண்டு இருந்தது. முயல் கொஞ்ச நேரம் தூங்கி இளைப்பாறியது. அதற்குள் ஆமை சென்று வென்று விட்டது.**

38. இக்கதையில் வரும் விலங்குகள் எவை?
(a) கங்காரு, முயல்
(b) ஆடு, யானை
(c) சிங்கம், யானை
(d) முயல், ஆமை

39. யார் தூங்கியது?
(a) ஆமை
(b) முயல்
(c) ஆமை முயல் இரண்டும்
(d) இரண்டுமே இல்லை.

40. யார் வென்றது?
(a) ஆமை
(b) முயல்
(c) ஆமை முயல் இரண்டும்
(d) இரண்டுமே இல்லை.